DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 106/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : ராஜபாண்டி (சார்பு ஆய்வாளர்) ( Pw.8)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of March 2026

(1, 2, 4, 5 எதிரிகள் ஆஜர். 3, 6 எதிரிகள் ஆஜர் இல்லை 3, 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை–**

நான் தற்போது பரளச்சி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.02.2024ம் தேதியன்று அ.முக்குளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றியபோது சிவலிங்காபுரத்தைச் சேர்ந்த மலைச்சாமி நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று, புகாரின் தன்மைகேற்ப மேற்படி நிலைய குற்ற எண்.13/2024 பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(1) இதச உ/இ 4 of TNPHW Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நீதிமன்றத்திற்கும்,

நகல்களை சம்மந்தபட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. பின்னர் அன்றைய தினமே11.00மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேசன், முனியாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவ சாட்சிகள் வாதி மலைச்சாமி, வீரமணிகண்டன், அம்மாதாயி , செல்லமணி, ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் 26.02.2024ம் தேதி மேற்படி எதிரியானவர்களுக்கு 41(A) Cr.P.Cபிரிவின் கீழ் அறிவிப்பு சார்பு செய்து 27.02.2024ம் தேதியன்று நிலையத்தில் ஆஜராக அறிவுறுத்தினேன். நிலையத்தில் அன்று காலை 10.00மணியளவில் ஆஜரான எதிரிகளை தக்க இருநபர் ஜாமீன்தார்கள் பெற்று நீதிமன்றத்தில் அழைப்பாணை வரும்போது ஆஜராகும்படி அறிவுறுத்தி அனுப்பினேன்.

4. பின்னர் 14.05.2024ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட மலைச்சாமி, வீரமணிகண்டன் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த காரியாபட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.காமாட்சி பாண்டியன் அவர்களை விசாரித்து விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு மேல்சிகிச்சைக்காக சென்ற காயம்பட்ட மலைச்சாமிக்கு சிகிச்சை அளித்த விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திருமதி. திவ்யா அவர்களை விசாரித்து கருத்துரை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **அந்த கருத்துரை அசாஆ 8 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து 14.05.2024ம் தேதியன்று எதிரிகள் மீது பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(1) இதச உ/இ 4 of TNPHW Act–ன் கீழ்– குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

எ.த.கு.வி–

மருத்துவரிடம் கருத்துரை எந்த தேதியில் பெற்றேன் என்றால் 14.05.2024ம் தேதி கருத்துரை பெற்றேன். எத்தனை நாட்கள் மலைச்சாமி விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்துள்ளார். மலைச்சாமி கொடுத்த புகாரில் எதிரியின் பெயர் S.அய்யங்காளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை அய்யங்காளை மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையிலும் அய்யங்காளை என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அசா1 வாக்குமூலத்தில் சிண்டக்ஸ் மோட்டாரின் பீஸ் கட்டையை பிடுங்கி ஊர்க்காரர்கள் வைத்திருந்தார்கள் என்று சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. அய்யங்காளை சிண்டக்ஸில் குளித்துக் கொண்டிருக்கும்போது நீ ஏன் குளித்துக் கொண்டிருக்கிறாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. சிண்டக்ஸ் குழாயை பயன்படுத்தக்கூடாது என்று ஊர்க்காரர்கள் முடிவு செய்துள்ளார்கள் என்று சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக ஊர்க்காரர்களை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அசா1 1வது எதிரியானவர் குளித்துக் கொண்டிருக்கும்போது ஏன் மோட்டாரை போட்டு குளிக்கின்றாய் ஏற்கனவே பிரச்சனையாக இருக்கிறது, ஊர்க்காரர்கள் பீஸ் கட்டையை பிடுங்கி வைத்தபோது ஏன் குளிக்கிறாய் என்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்துவிட்டுதான் காயம்பட்டவர்கள் மருத்துவமனைக்கு சென்றார்களா என்றால் இல்லை, மருத்துவமனைக்கு சென்றுவிட்டு வந்து புகார் கொடுத்தார்கள். அசா1 எனது வாக்குமூலத்தில் என்னிடம் புகார் கொடுத்துவிட்டுதான் காரியாபட்டி மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. ஊர்க்காரர்கள் மோட்டாரை பயன்படுத்தக்கூடாது என்று சொல்லி ஒரு வாரம் கழித்துதான் இந்த சம்பவம் நடந்தது என்று சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. காரியாபட்டி மருத்துவமனையில் ஸ்கேன் வசதி இல்லாத

காரணத்தினால் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியதாக சொல்லி உள்ளாரா என்றால் மேல்சிகிச்சைக்காக சென்றதாக தெரிவித்துள்ளார். 1ம் எதிரி வயரை மாற்றி மோட்டார் போட்டார் என்று சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. காவல் நிலையத்திலிருந்து காயம்பட்டவர்களுக்கு மருத்துவமனைக்கு செல்வதற்கு மெமோ எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அசா1, அசா2 ஆகியோர்கள் அய்யங்காளை முதுகில் அடித்ததாகதான் சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான். கொடுரமான ஆயுதங்களால் தாக்கியதாக சொல்லி உள்ள நிலையில் அது என்ன வகையான ஆயுதங்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கடப்பாரை, கம்பி, கட்டை ஆகியவை என்று சொல்லி உள்ளார்கள். அதை எவற்றையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அசா2 தனது அப்பாவின் அலறல் சத்தம் கேட்டு சென்றதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சிகளை நான் மீண்டும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்ன நடந்தது என்று சொல்லி அவர்களிடம் கையொப்பம் வாங்கினேனா என்றால் இல்லை, எப்படி நடந்துதுள ன்று கேட்டு அதன்பின்பு தான் அவர்களிடம் கையொப்பம் பெற்றேன். வரைபடத்தில் சிண்டக்ஸ் தொட்டி மலைச்சாமி வீட்டிற்கு அருகில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 60 அடி தொலைவில்தான் சிண்டக்ஸ் தொட்டி உள்ளது என்றால் அவ்வளவு தொலைவு இருக்காது, சுமார் 20 அடி தொலைவில் இருக்கும். நான் சரியாக சம்பவ இடத்தை பார்வையிடமால் 20 அடி தொலைவு இருக்கும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசா2 புகார் மனு கொடுத்துவிட்டுதான் மருத்துவமனை சென்றோம் என்று சொல்லி உள்ள நிலையில் சண்டையை விலக்கிவிட்டவுடன் கட்டையை காட்டி மிரட்டினார்கள் என்று சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான். அசா3 தனது வாக்குமூலத்தில் கட்டையை காட்டி மிரட்டினார்கள் என்று சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான். அசா3 தனக்கு ஏற்பட்ட காயமானது ஊமைக்காயம் என்று சொல்லி உள்ளார் என்றால் சரிதான். எனது கணவரை முதுகில் அடித்ததாக என் விசாரணையில் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். விலாவில் அடித்து கீழே

தள்ளிவிட்டதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அசா2, அசா3 ஆகியோர் மோட்டாரை ஏன் போட்டீர்கள் என்று அசா1 கேட்டார் என்று சொல்லி உள்ளார்கள் என்றால் இல்லை, கழிவுநீர் எங்கள் வீட்டின்வழியாக வருகிறது என்று சொல்லியுள்ளதாக வாக்குமூலம் அளித்துள்ளார்கள். நான் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் கால்வாய் எதுவும் இல்லை என்றாலும் அதில் உள்ள வீடுகள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இது விபத்து சான்றிதழ் என்றாலும் காயச்சான்று இல்லை என்றாலும் சரியல்ல. இரு மருத்துவரிடம் தனியாக காயச்சான்றுகள் பெறவில்லை என்றால் சரிதான். ஊர்க்காரர்கள் சிண்டக்ஸ் குழாயை பயன்படுத்தக்கூடாது என்று சொன்ன ஊர்மக்களையோ, பெரியவர்களையோ விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் உண்மையில்லாத காரணத்தினால்தான் ஊர்க்காரர்கள் யாரையும் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அசா4 , அசா3ன் உடன்பிறந்த சகோதரர் அசா4 இந்த சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார் என்றால் சரியல்ல. அசா4 சிவலிங்காபுரத்திற்கு அருகில் உள்ள அம்பேத்கர் நகரைச் சேர்ந்தவர் என்றாலும் நான் தவறாக சிவலிங்காபுரத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது சிவலிங்காபுரம் கிராமத்தைச் சேர்ந்த இடம்தான். அம்பேத்கர் நகர் சிவலிங்கபுரம் கிராமத்தை சேர்ந்த கிராமம் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.